


சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி திமுக சார்பில், தமிழக அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டம், 'நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு' என்ற தலைப்பில், கோடம்பாக்கம் மரஸ்புரத்தில் நேற்று நடந்தது. இதில், சிறப்பு விருந்தினராக மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் பங்கேற்று பேசினார். உடன் மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.



திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி தொகுதி, எல்லாபுரம் ஒன்றியம் பனையஞ்சேரி கிராமத்தை சேர்ந்த கழக முன்னோடி மாற்றுத்திறனாளி விஜ்னுவின் கோரிக்கையை ஏற்று மூன்று சக்கர பேட்டரி வாகனத்தை முன்னாள் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளர், தலைமை செயற்குழு உறுப்பினர், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி.ஜெ.கோவிந்தராஜன் வழங்கினார். உடன் எஸ்.ரமேஷ், இரா.அறிவழகன், எம்.தேசவன், ஜெயலலிதாசசிதரன், டி.ஜெ.டி.தினேஷ், கண்ணம்பாக்கம் பழனி, கரிகாலன், ரமேஷ், கஜேந்திரன், பாலசந்தர், யுவராஜ், பிரபாகரன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்

# திருநின்றவூர் நகர இலக்கிய அணி அமைப்பாளர் பி.எல்.ஆர்.யோகா இல்ல விழா!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் வாழ்த்துகிறார்! கழக நிர்வாகிகள் பங்கேற்பு!

திருவள்ளூர் மே 13-

திருவள்ளூர் மத்திய மாவட்டம் திருநின்றவூர் நகர இலக்கிய அணி அமைப்பாளர் பி.எல்.ஆர். யோகா நகர மன்ற உறுப்பினர் ஒய்.தேவி யோகா அவர்களின் மகள் மஞ்சள் நீராட்டு விழா நாளை 14-05-2025 புதன் கிழமை அன்று மாலை 6.00 மணிக்கு திருநின்றவூர் கொசவன்பாளைத்தில் ஸ்ரீலலிதா மஹால் நடைபெறுகிறது இதில் நகர கழகச் செயலாளர் தி.வை. இரவி, உஷாராணி ரவி , சரளா நாகராஜ் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள் இதில் திருவள்ளூர் மத்திய மாவட்ட செயலாளரும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் கலந்துகொண்டு வாழ்த்துகிறார்

இதில் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, மாநில மாவட்ட நிர்வாகிகள் கே.ஜெ.ரமேஷ், மா. இராஜி, பிரபு கஜேந்திரன், சி.ஜெரால்டு, வி. ஜெ.சீனிவாசன், எஸ். ஜெயபாலன், காயத்திரிஸ்ரீதர், பா.நரேஷ்குமார் த.எத்திராஜ், ஜி.ராஜேந்திரன், ஜி.விமல்வர்ஷன், எம்.முத்தமிழ்செல்வன், வி. குமார், ஜெ.மகாதேவன், காஞ்சனாசுதாகர், எஸ்.சங்கர் , இளைஞர் அணி கே.சுரேஷ்குமார், மாநகர ஒன்றிய நகர பேரூர் பகுதி செயலாளர்கள் சன்.பிரகாஷ், டி. தேசிங்கு, பொன்.விஜயன், பேபிசேகர், ஜி.நாராயண பிரசாத், என்.இ.கே. மூர்த்தி, ஆர்.ஜெயசீலன் புஜ்ஜி டி.ராமகிருஷ்ணன், ப.சு.கமலேஷ், ஜி.ஆர்.திருமலை, சே.பிரேம் ஆனந்த், தங்கம் முரளி, தி.வே.முனுசாமி மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மாநகர ஒன்றிய நகர் பகுதி பேரூர் கழக நிர்வாகிகள் நகர் மன்ற உறுப்பினர்கள் வார்டு கிளைக் கழக செயலாளர்கள் கழக மூத்த முன்னோடிகள் கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்கிறார்கள்.

### முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்

# அண்ணாநகர் சோ.மா.ராமச்சந்திரன் 100வது பிறந்தநாள் விழா!

## அமைச்சர்கள் – முன்னணியினர் வாழ்த்து! மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிக்கை!

சென்னை, மே 13-

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சோ.மா.ராமச்சந்திரன் அவர்களின் 100-வது பிறந்தநாள் விழா, அமைச்சர் பெருமக்கள், தலைமை கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் வாழ்த்துகின்றனர் என்று மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நன்மதிப்பையும் நற்சான்றிதழையும் பெற்றவரும் கழகத் தலைவர் இந்தியாவின் நம்பர் 1 முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் நம்பிக்கைக்குரிய முன்னாள் அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர், ஒருங்கிணைந்த அண்ணா நகர் பகுதி செயலாளர் தலைமை செயற்குழு உறுப்பினர் கழக செயல் வீரர் சோ.மா. ராமச்சந்திரன் அவர்களின் 100வது பிறந்த நாள் விழா 15.05 .2025, காலை 9 மணியளவில் அய்யாவு மஹால், அமைந்தகரை, சென்னை - 29 என்ற முகவரியில் நடைபெறுகின்றது.

வாழ்க பல்லாண்டு பல்லாண்டு என வாழ்த்த வருகை தரும் அமைச்சர் பெருமக்கள், தலைமை கழக நிர்வாகிகள், மாவட்ட செயலாளர்கள், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு / பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள் பகுதி & வட்ட நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், அணிகளின் மவட்ட / பகுதி / வட்ட அமைப்பாளர்கள், தலைவர், துணை தலைவர், துணை அமைப்பாளர்கள், கழக இன்னாள், முன்னாள் நிர்வாகிகள், மூத்த முனோடிகள் என அனைவரும் பெருந்திரளாக வந்து அவரை வாழ்த்துக்களை பெற வருகை தருமாறு என அன்புடன் வரவேற்கிறோம்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### மாதவரம் எஸ்.சுதர்சனம் வெ.அன்புவாணன் சிறப்புரை! வை.ம. அருள்தாசன் ஏற்பாட்டில்

# திருவொற்றியூர் மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்!

## ஆரம்பாக்கம் கே. ஆறுமுகம், தி.மு. தனியரசு பங்கேற்பு!

சென்னை, மே.13-

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் மேற்கு பகுதி திமுக சார்பில் கழகத் தலைவர் முதல்வர் அவர்களின் திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம.அருள்தாசன் (10.05.2025 அன்று) எர்ணாவூர் மார்க்கெட்டில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ, கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் வெ.அன்புவாணன் கழக நான்காண்டு சாதனைகளை விளக்கி கூறி சிறப்புரையாற்றினார்.

இதில் மாவட்ட பொருளாளர் எம்.ஆனந்தன், தொகுதி பார்வையாளர் ஆரம்பாக்கம் கே. ஆறுமுகம், கிழக்கு பகுதி கழக செயலாளர் தி.மு.தனியரசு எம்.சி., பங்கேற்றனர். வட்டக் கழக செயலாளர் கே.பவுல், மாவட்ட பிரதிநிதி முருகா எஸ்.ஆறுமுகம், வழக்கறிஞர் அணி ஜி.ஹரிஹரன், ஆகியோர் வரவேற்பு அளித்தனர்.

பகுதி கழக நிர்வாகிகள் யு.எஸ்.குறளரசன், எம். வஜ்ரவேல் மற்றும் க. சோழன் பி.கார்த்திக் டி.கர்ணன் ஜே.எம்.குமரன் வி.ஹிமாம்வந்த் வட்ட கழக நிர்வாகிகள் இ.அப்துல்காதர், வே.விக்னேஷ், சி.மோகன் ஜி.பூங்கொடி பி.எம்.ஹரி, ஜி.குருசாமி, க.கண்ணன் அ.இமானுவேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்வில் வட்டக் கழக செயலாளர்கள்/ மாமன்ற உறுப்பினர்கள் மு.சிவகுமார் எம்.சி., டி. சேகர், கி.கண்ணன், ஏகா. கார்த்திகேயன், கிழக்கு பகுதி கழக நிர்வாகிகள் எம்.வி.குமார், ஆர்.குமரேசன், மாவட்டபிரதிநிதிகள் ஆர்.தினேஷ்குமார், எஸ். கணேஷ்.எஸ்.ஆர்.மலைராஜ், பி.எஸ்.சைலஸ், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் எல். என்.வி.தியாகராஜன், ஆர். மோகனசுந்தரம், ஆர். நவக்குமார், வ.உதயகுமார், வை.ம. கண்ணதாசன், டி.சக்கரவர்த்தி, பா.பால உமாபதி, ரா.லோகு, எம்.எஸ். தினேஷ் வேலன், மு.கார்த்திக்,

கே.செந்தில்குமார், எஸ்.தாமரை, எஸ். ராஜேஷ் ம.சுந்தர்,பி. வித்யா டி.ஞானசேகர், சி. ஜெயபிரகாஷ், மணிகண்டன், எம்.கார்த்திக், வி. கே.ஏழுமலை, கே.பாலு ரா.மதன்குமார், எம்.வி. வசந்த், வை.பாலசுந்தரம், கலைஞர் நகர் எஸ்.பாபு, ரேஷன் கடை குமார், மு.பாபு, எம்.ராமு, ஆர். நரேன்குமார், டி.தேசப்பன், கே.கோகுல கிருஷ்ணன், அருள்ராஜ், ஜாவகர், எஸ்.கௌதம், பகவதி அம்மாள், க. சாமுண்டீஸ்வரி, ஜே.சி. கோபி குமார், முரசொலி குமரேசன், க.உதயகுமார், எஸ்.மகேஸ்வரன், ஜெ. விக்னேஷ், எஸ்.வினோத், எஸ்.ஜோயல், எஸ்.வீரசந்திரன், ராமலிங்கம்,, எஸ். எஸ்.குமார் வி.பாஸ்கர், கே.புருஷோத்தமன், தில்லை செல்வராஜ்,தங்கமுத்து, ஜெயச்சந்திர பாபு, ஆர்.வாசுதேவன், கா.நந்தகுமார், வி.தேவராஜ் ஜி. மணிவண்ணன் வி.குமார், சஞ்சீவி குமார், ம.அறிவழகன், சோமு, சக்கரை, பாண்டியன், தினேஷ் குமார், ராஜேந்திரன் ஜெ.மாரிமுத்து, ஜெ.பிரேம்குமார், எஸ். ரமேஷ் ரோனி, ஆர். செல்லா, ஆர்.பாலாஜி, சந்தோஷ் மதியழகன், ஆர்.காம்ப்ளி, ஆர்.எஸ். யுவராஜ், டி.சக்கரபாணி, ஜி.வெற்றிச்செல்வன், எஸ்.பிரதீப், பா.அஜித், எஸ்.யுவராஜ், என்.டி.அன்புச்செல்வன், பா.யோகித், எஸ்.ஜெய் விக்னேஷ், ஜி. கணேஷ், குணா, யு. மாதேஷ், உதயகுமார், விஜயகாந்த், அருண்குமார், அபி, கந்தசாமி,. கணேஷ் மற்றும் மாவட்ட பகுதி கழக நிர்வாகிகள், பாக முகவர்கள், கழக மூத்த முன்னோடிகள், திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.இறுதியாக மாவட்ட கழக பிரதிநிதி ந.ராம்குமார் நன்றி கூறினார்.

### தொழில் முனைவோர் மற்றும் சிறு வணிகங்களுக்கான

# டிஜிட்டல் சந்தைப்படுத்தல் பட்டறை - பயிற்சி!

## இரு நாட்கள் நடைபெறுகின்றது!

சென்னை, மே 13-

தமிழக அரசின் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சென்னையில், "தொழில்முனைவோர் மற்றும் சிறு வணிகங்களுக்கான டிஜிட்டல் சந்தைப்படுத்தல் பட்டறை" பயிற்சி வரும் 28.05.2025 முதல் 29.05.2025 தேதி வரை காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடைபெற உள்ளது.

இப்பயிற்சிப் பட்டறையின் முக்கிய மதிப்பு முன்மொழிவுகள்:

- வணிக சந்தைப்படுத்துதலின் அடிப்படைகள்
- வளர்ச்சிக்கான அலகு பொருளாதாரம்
- முக்கிய அளவீடுகளைப் புரிந்துகொள்ளுதல்
- அதிக மாற்றும் சந்தைப்படுத்துதல் புனலை உருவாக்குதல்
- டிஜிட்டல் சந்தைப்படுத்துதலின் இரகசியங்கள்
- வெற்றிக்கான தந்திரங்கள் மற்றும் கருவிகள்
- குறிப்புக்கான நிகழ்வு ஆய்வுகள்.

இப்பயிற்சி பற்றிய கூடுதல் விவரங்களை பெற விரும்புவோர் WWW.EDITN.IN என்ற வலைத்தளத்தில் தெரிந்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு அலுவலக வேலை நாட்களில் (திங்கள் முதல் வெள்ளி வரை) காலை 10 மணி முதல் மாலை 5.45 மணி வரை தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி மற்றும் தொலைபேசி / கைபேசி எண்கள்.

தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சிட்கோ தொழிற்பேட்டை, பார்த்தசாரதி கோயில் தெரு, இடிஐஐ அலுவலக சாலை ஈக்காட்டுத்தாங்கல், சென்னை - 600 032, கைபேசி எண்கள்: 9360221280 / 9543773337.

### ஈஞ்சம்பாக்கம் 194வது வார்டு

# பெத்தேல் நகரில் குடிநீர் குழாய் அமைக்கும் பணி !

## விமலா கர்ணா எம்.சி. துவக்கி வைத்தார்!

சென்னை, மே. 13-

சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும் அமைச்சருமான மா.சுப்பிரமணியன் ஆணைக்கிணங்க, சோழிங்கநல்லூர் ச.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ. வழிகாட்டுதலின்படி 15 வது மண்டலக் குழு தலைவரும் பகுதி செயலாளருமான எ.மதியழகன் ஆலோசனைப்படி, சென்னை மாநகராட்சி ஈஞ்சம்பாக்கம் 194 வது வார்டு தெற்கு பெத்தேல் நகர் பகுதி மக்கள், கவுன்சிலர் கே.விமலா கர்ணாவிடம் குடிநீர் குழாய் அமைத்து தரும்படி கோரிக்கை விடுத்தனர்.

பொதுமக்களின் கோரிக்கையினை ஏற்று 12 இடங்களில் குடிநீர் குழாய் அமைக்கப்பட்டுள்ளது. அதனை மக்கள் பயன்பாட்டிற்கு கவுன்சிலர் விமலா கர்ணா துவக்கி வைத்தார்.

பின்னர் பொதுமக்களிடம் குறைகளைக் கேட்டறிந்தார்.

இதில் 194 வது (அ) வட்ட தி.மு.க. செயலாளர் குங்ஃபூ மாஸ்டர் எஸ். கர்ணா, மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### அவைத் தலைவர் ஜி.ஆர். இராஜேந்திரன் தலைமையில்

# மயிலை மேற்கு பகுதி வட்டச் செயலாளர் ஆலோசனைக் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் நந்தனம் கி.மதி அறிக்கை!

சென்னை, மே 13-

இது குறித்து பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி அறிக்கை வருமாறு

சென்னை தென்மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் மயிலை த.வேலு M.L.A. ஆலோசனைபடி மயிலை மேற்கு பகுதி சார்பில் வட்டச் செயலாளர் ஆலோசனைக் கூட்டம் அவைத் தலைவர் ஜி.ஆர். இராஜேந்திரன் தலைமையில் வட்டக் கழகச் செயலாளர்கள் ஆலோசனை கூட்டம் இன்று (13.05.2025 செவ்வாய்க்கிழமை) மாலை 6:30 மணியளவில் 121வது மாமன்ற அலுவலத்தில் நடைபெறுகிறது.

தொகுதி பார்வையாளர் கோ.வி.லெனின் ஆலோசனை வழங்குகின்றார்.

பகுதி துணை செயலாளர்கள் ஆர்.எல்..வி. அசோக் குமார், பா.பாக்கியதாஸ், அகல்யா விஸ்வநாதன், பொருளாளர் ஜி.முருகையன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

வட்டச் செயலாளர்கள் டி. இராஜவேலு, சீ.கிருஷ்ணமூர்த்தி, எஸ். ஆர்.ராஜா சுரேஷ் குமார், அ.நாகராஜன், மு.இ.ஏழுமலை, மூ.இராஜேந்திரன் கலந்துக் கொள்ளுமாறு பகுதிச் செயலாளர் நந்தனம் கி.மதி கேட்டுக் கொண்டுள்ளார்.

பொருள்: கழக ஆக்க பணிகள்




சென்னை மேற்கு மாவட்டம் அண்ணா நகர் தெற்கு பகுதி திமுக சார்பில் நான்காண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் அரும்பாக்கத்தில் நடைபெற்றது இந்த கூட்டத்திற்கு பகுதி செயலாளர் நா. ராமலிங்கம் எம்.சி தலைமை வகித்தார். இதில் தலைமைக் கழக பேச்சாளர் சென்னை அரங்கநாதன், சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் சிற்றரசு, அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே மோகன், ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினர் மேலும் இந்த நிகழ்ச்சியில் மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் கார்த்திக்மோகன், இளம் பேச்சாளர் மு. முஸ்தக், வட்டக் கழக செயலாளர்கள் அதியமான், பொன்னுரங்கம் மகேஷ் ராஜா, ரவிந்தர் குமார், கருணாநிதி,சிவா கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பெருமளவில் கலந்து கொண்டனர்.

### கழக தொண்டரணிச் செயலாளர்

# மாஸ்டர் பெ.சேகர் தாயார் திருமதி. பெ.மாரிமுத்து மறைவு!

## கழக முன்னணியினர் அஞ்சலி!



சென்னை, மே.13-

தி.மு.க. மாநில தொண்டர் அணிச் செயலாளர் மாஸ்டர் பெ.சேகரின் தாயார் திருமதி பெ.மாரிமுத்து அவர்கள் (வயது 95) (தி.மு.க. மேல் வசலைக் கிளையின் முன்னாள் அவைத்தலைவர்) வயது மூப்பு காரணமாக ஓமந்தூரார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பலனின்றி நேற்று (12.5.2025) இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

செய்தியறிந்ததும் கழக முன்னணியினர் தோழர்கள் திரளாகச் சென்று மறைந்த பெ.மாரிமுத்து அவர்களின் உடல்மீது மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் இன்று (13.5.2025) பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து (எஸ்.பி.க்யூ, 43, இலாயிட்ஸ் காலனி, இராயப்பேட்டை, சென்னை - 600 014) என்னும் முகவரியில் இருந்து புறப்பட்டு மயிலாப்பூர் இடுகாட்டில் இறுதிச் சடங்குகள் நடைபெறுகின்றன.



167– வது வட்டத்தில் துர்கா தேவி நடராஜன் எம்.சி., வட்ட கழக செயலாளர் ஜெ. நடராஜன் ஆகியோர் தலைமையில் ஜெம் மருத்துவமனை, மற்றும் ஆண்டர்சன் ரத்த ரேண்டம் பரிசோதனை, மங்கள தீபம், லெட்ஸ் பீட் தி நீடி, கிளவுட் நயன் டென்டல் மருத்துவமனை, அகர்வால் கண் மருத்துவமனை இணைந்து இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது. இதில் பகுதி கழக செயலாளரும் – மண்டலக் குழுத் தலைவர் என்.சந்திரன் 75 நபர்களுக்கு இலவச கண் கண்ணாடியை வழங்கினார். இதில் இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் கோல்டு டி. பிரகாஷ், கழக நிர்வாகிகள் ரமணா, பிரான்சிஸ், சதீஷ், குருமூர்த்தி சரவணன், ராஜ்குமார், சூரிய நாராயணன், மெடிக்கல் பாபு, ஞானசேகரன், மருத்துவர்கள், செவிலியர்கள், மற்றும் பொதுமக்கள், நல சங்க நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.